# நகரத்தார் திருமணச் சடங்கு முறைகள் மற்றும் கோலங்கள்



மணமக்கள்

**ராம்நாத்** B.Tech., M.S., Ph.D., – **வள்ளியம்மை** B.Com., ACA

மணநாள்

8-9-2016, வியாழக்கிழமை

அன்பளிப்பு

வித்யா வள்ளியப்பன்

வினை வள்ளியப்பன்

அசுரித்தா ராம்நாத்

Chettiars' Temple Society
Singapore

# விநாயகர் துதி



வாக்குண்டாம் நல்ல மணமுண்டாம் மாமலராள்
நோக்குண்டாம் மேனி நுடங்காது பூக்கொண்டு
துப்பார் திருமேனி தும்பிக்கையான் பாதம்
தப்பாமற் சார்வார் நமக்கு.

பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்துனக்கு நான் தருவேன் கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்து தூமணியே நீஎனக்குச்
சங்கத்தமிழ் மூன்றுந் தா.

# முருகன் துதி



உருவாய் அருவாய், உளதாய் இலதாய்
மருவாய் மலராய், மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க், கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய், அருள்வாய் குகனே.

ஏறுமலையில் ஏறிவினை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும்அடி யார்கள் வினை தீர்க்கும் ஒன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகம் ஒன்றே
மாறுபடு சூரரை வைத்தமுகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்தபெரு மாளே.

Chettiars' Temple Society Singapore

## கழுத்துரு கோர்த்தல்

கழுத்துரு நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு மட்டுமே உரிய மங்கல அணிகலன்களில் முக்கியமானதாகும். முதல் நாள் கழுத்துரு வாங்கப்போவது ஒரு சடங்காகும். அப்பொழுது மணமகள் வீட்டிலிருந்து மணமகன் வீட்டார் கழுத்துருவை வாங்கி வந்து பெரியவர்கள் சரடு பின்னி கோர்ப்பது வழக்கம்.

கழுத்துரு என்பது கழுத்தில் அணியும் பல உருக்கள் கொண்ட அணிகலன்களாகும். இது கோர்ப்பதற்கு 10 நிர் வெள்ளை நூல் கண்டு வாங்க வேண்டும். இரு பெரியவர்கள் அந்த நூலில் 21 பாகம் எடுத்து அதை மூன்றாக மடித்து ஒரு மடிப்புக்குள் இன்னொரு மடிப்பை பின்னலாகக் கொடுத்து வாங்கி, சங்கிலிப் பின்னல் போல் பின்னி நன்றாக இறுக்கமாகத் திரித்துக் கொண்டு பட்டணம் மஞ் சளை நீரில் நனைத்துக் கொண்டு அந்த நூலால் தேய்த்து மஞ்சள் நன்றாக ஏறும்படி செய்து முறுக்கு விடாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்ள வேண்டும். அப்படி கிடைப்பது 7 பாகமாக இருக்கும். இதை இரண்டாக மடித்துக் கழுத்துருவில் 31 உருப்படிகளையும் கோர்க்க வேண்டும்.

மேல்பாகம் கீழ்ப்பாகம் கோர்த்த பின் இரண்டையும் இரு முனைகளிலும் தனித்தனியே உருவி வராத நிலையில் நன்றாக முடிச்சு போட வேண்டும்.






| | | |
|---|---|---|
| மேல்பாகம் | – | 1, 2, 3, 4, 5, 6, 7, 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16 |
| கீழ்பாகம் | – | 17, 18, 19, 20, 21, 22, 23, 24, 25, 26, 27, 28, 29, 30, 31 |

| | | | |
|---|---|---|---|
| 1, 16, 17, 31 | – | கடைமணி | |
| 2, 3, 4, 6, 8, | – | 10, 12, 14, 15, 18, | |
| 19, 20, 22, 23 | | 25, 26, 28, 29, 30 | உரு |
| 5, 13, 21, 27 | – | ஏத்தனம் | |
| 24 | – | லெட்சுமி ஏத்தனம் | |
| 7, 11 | – | சரி மணி | |
| 9 | – | திருமங்கலம் | |

## பிள்ளைச்சரடு இழைதல்

இதைப்போல 7 பாகம் நூல் எடுத்து 3–ல் ஒரு பங்காக சங்கிலிப் பின்னல் பின்னி மஞ்சள் ஏற்றி அதில் ஒத்தை தும்பை கோர்க்க வேண்டும். ஒரு நல்ல நாள் பார்த்து கழுத்துருவின் இடது பக்கத்தில் இரண்டு கயிற்றிலும் சேர்ந்து குச்சி, தும்பு, தூவாளையைக் கட்டி பின்னர் கழுத்துருவை கழுத்தில் அணிந்து கொண்டு சாமி கும்பிட்ட பின்னர் கழட்டி வைக்க வேண்டும்.

Chettiars Temple Society Singapore

## பெண் வீட்டார் திருமணத்திற்கு முன்கூட்டியே தயாரித்து வைக்க வேண்டிய சாமான்கள்

1. விரலி மஞ்சள்
2. மஞ்சள் தூள்
3. சந்தனம்
4. நிலை விளக்கு
5. அரசாணி மேடை
6. அரசாணி அடுப்பு
7. அரசாணிக்கல் கட்ட மூங்கில் கம்பு
8. பாலைக் குச்சி
9. கிளுவைக் கம்பு
10. பவளம் அல்லது சிவப்பு
11. வெள்ளிக்காசு 25 பைசா
12. மாவிலை
13. அரச இலை
14. முளைப்பாரிக் கிண்ணம்–5
15. சிலேட்டு விளக்கு – 1
16. பெரிய தாம்பளம்
17. முக்காலி – 2
18. சருவச் சட்டி – 2
19. செம்பு
20. கெண்டிச் செம்பு
21. சடங்குத் தட்டு
22. படி
23. சடங்குத்தட்டு 7 கிண்ணங்களுடன்
24. குழவி பட்டுடன்
25. நவதானியம்
26. வேவுக் கடகம் – 2
27. ஏட்டு ஓலை
28. பச்சரிசி
29. மாமப்பட்டு
30. சங்கு
31. ஆரத்தித் தட்டு
32. விபூதித்தட்டு
33. இசைவு பிடிமான ஏடு – 1
34. மொய்ப் பண ஏடு – 1
35. தடுக்கு – 2
36. பர்மா பாய் – 1
37. மணை
38. மணை விரிப்பு
39. காப்பு கட்டும் சிவப்புத் துணி
40. சர விளக்கு
41. செங்கல் – 5
42. பச்சை நெல் உமி
43. கொச்சை கயிறு முடி –5
44. தேங்காய்
45. வாழைப்பழம்
46. கத்தரிக்காய்
47. கோலக்கட்டு
48. மலர் மாலை
49. அரசஞ் சமித்து
50. ஆட்டுப் புழுக்கை

## மாப்பிள்ளை வீட்டார் திருமணத்திற்கு முன் கூட்டியே தயாரித்து வைக்க வேண்டிய சாமான்கள்

1. விரலி மஞ்சள்
2. மஞ்சள் தூள்
3. சந்தனம்
4. குங்குமம்
5. கற்கண்டு
6. பட்டணம் மஞ்சள்
7. நில விளக்கு
8. சிலேட் விளக்கு
9. பெரிய தாம்பாளம்
10. சட்டி, செம்பு
11. கெண்டிச் செம்பு
12. சடங்குத் தட்டு
13. படி
14. குழவி பட்டுடன்
15. கத்தரிக்காய்
16. முளைப்பாரி நெல் பெ.படி – 1
17. நவதானியம்
18. சங்கு
19. ஆரத்தித் தட்டு
20. விபூதித் தட்டு
21. கோட்டை நெல் பெ. படி – 2
22. வைக்கோல்
23. துணிப்பை –1
24. வள்ளுவப் பை
25. குலம் வாழும் பிள்ளை
26. இசைவு பிடிமான ஏடு – 1
27. மொய்ப் பண ஏடு – 1
28. தடுக்கு – 2
29. பர்மா பாய்
30. கோலக்கட்டு
31. டர்பன் (தலைப் பாகை)
32. 10 நம்பர் நூல் கண்டு – 1
33. திருப்பூட்டுகிற மாலை – 2

## பூரம் கழிக்கத் தேவையான சாமான்கள் – பெண் வீட்டில்

அரைத்த மஞ்சள்
சந்தனம், புஷ்பம்
நெல் படி – 1
பச்சரி படி – 1
உப்பு படி – 1
இலை அடுக்கு – 1
கத்தரிக்காய் – 5
தேங்காய் – 3
வாழைப்பழம் – 6
வெற்றிலை, பாக்கு
பால்
முக்காலி, செம்பு
சருவச்சட்டி, சத்தகம்
மாவிலை, வேப்பிலை

## காப்புக் கட்டுச் சாமான்கள்

அரைத்த மஞ்சள்
முனை முறியாத விரலி மஞ்சள்
நூல் கண்டு
கரைத் துணி
மாமப்பணம் ரூ.2.
தேங்காய் – 3
வாழைப்பழம் – 10
இலை அடுக்கு – 1
வெற்றிலை பாக்கு
சந்தனம்
கதம்பம் புஷ்பம்
மாவிலைக் கொத்து
நெல் படி – 1
செம்பில் தண்ணீர்
பச்சரிசி படி – 1
பால் அரை உழக்கு
நெய் அரை உழக்கு
மணல், உமி
சூடம்
முக்காலி – 2
சருவச்சட்டி – 2
தாம்பாளம் – 2
முளைப்பாரி கிண்ணம் – 5
முளை திரவியம்
சிகப்புப் பட்டு – 1

மாப்பிள்ளை வீட்டில் திருமாங்கல்யம் கோர்த்து வைக்க வேண்டும். (காப்புக் கட்டுச் சாமான்கள் மாப்பிள்ளை பெண் இருவருக்கும் காப்புக் கட்டுவதற்கு. இதுபோல் இரண்டு செட் பெண் வீட்டார் எடுத்து வைக்க வேண்டும்)

## மணவறை சாமான்கள் - பெண் வீட்டில்

அரைத்த மஞ்சள்
தேங்காய் – 3
வாழைப்பழம் – 10
இலை அடுக்கு – 1
வெற்றிலை, பாக்கு
சந்தனம்
கதம்பம் புஷ்பம்
நெல்படி – 1
பச்சரிசி படி – 1
நூல் கண்டு – 1
அரசஞ்சுள்ளி
பால் அரை உழக்கு
நெய் அரை உழக்கு
சூடம்
முளைத் திரவியம்
கிண்ணத்தில் நல்லெண்ணெய்
மாலை – 2
சடங்குச் சாமான்கள்
மாப்பிள்ளைக்குச் சாப்பாடு
சிகப்புப் பட்டு – 1
செம்பில் தண்ணீர்

## அரசா(ணி)ணைக்கால் கட்டுவதற்கு வேண்டிய சாமான்கள்

சிறுபவளம் அல்லது சிவப்பு 25 பைசா காசு - 1
கிளுவைக் கம்பு - 1
பாலைக் குச்சி - 1
மா இலைக் கொத்து
அரச இலைக் கொத்து
அரசாணி மேடை
அரசாணி அடுப்பு
முளைப்பாரி கிண்ணம் - 5
ஆட்டாம் புழுக்கை
சரவிளக்கு - 1
கொச்சைக் கயிறு - 3 அடி

## திருப்பூட்டுத் தாம்பூளத்தில் எடுத்து வைக்க வேண்டிய சாமான் விபரம் மாப்பிள்ளை வீட்டில்

1. விரலி மஞ்சள்
2. எலுமிச்சம் பழம் - 2
3. வெற்றிலை, பாக்கு
4. மல்லிகைப் பூ முழம் - 2
5. விபூதி சிறு கிண்ணத்தில்
6. குங்குமம் சிறு கிண்ணத்தில்
7. வெற்றிலையில் - அரைத்த மஞ்சள்
8. சந்தனம் சிறு கிண்ணத்தில்
9. கழுத்துறு திருமாங்கல்யம்
10. பெரிய தாலி சோடிப்பு
11. சிறு தாலி சோடிப்பு
12. கோயில் மாலை
13. திருப்பூட்டு பெரிய யானைக் கண் மாலை
14. பெண்ணிற்குக் கொடுக்கும் திருப்பூட்டு மாலை
15. மேற்படிக்கான ரவிக்கை
16. குலதேவதையின் விபூதி பிரசாதம்
17. மிட்டாய் - 2

Chettiars' Temple Society Singapore

## பெண் வீட்டில்

1. விரலி மஞ்சள்
2. வெற்றிலை பாக்கு
3. எலுமிச்சை பழம் – 1
4. விபூதி
5. குங்குமம்
6. சந்தனம்
7. பெரிய பூமாலை
8. கெண்டை வேட்டி, துண்டு
9. தங்க மைனர் செயின்
10. மோதிரம்
11. கைக்கெடிகாரம்
12. பூச்செண்டு

## இரு வீட்டாரும் சர்வச் சட்டியில் எடுத்து வைக்க வேண்டியவை

1. மட்டை உரித்து மஞ்சள் தடவிய தேங்காய் – 2
2. வெற்றிலை பாக்கு
3. விரலி மஞ்சள் – 2
4. வெள்ளிச் சர்வச் சட்டி

## திருமண நடைமுறைச் சடங்குகளின் சுருக்கம்
## பெண் வீட்டார் செய்பவை

1. கல்யாணம் பேசி முறைச் சிட்டை எழுதிக் கொள்ளல்
2. நிச்சயதார்த்தம்
3. முகூர்த்தத்திற்கு நாள் குறித்தல்
4. முகூர்த்தக் கால் ஊன்றுதல்
5. சுவாமிகளுக்கு பணம் முடித்தல்
6. கல்யாணம் சொல்லுதல்
7. திருமணக் கொட்டகை அலங்கரித்தல்
8. கோயிலுக்கு பாக்கு வைத்தல் (பங்காளிகள்)

Chettiars' Temple Society Singapore

## கல்யாணத்திற்கு முதல் நாள்

9. கூடி ஆக்கி உண்ணுதல்
10. நடு வீட்டில் விளக்கு ஏற்றுதல்
11. கொழு மேளம் வாசிக்கச் செய்தல்
12. மணை போடுதல்
13. கோயில் மாலைகளை வாங்குதல்
14. வளவு வீட்டில் தும்பு பிடித்தல் கோலமிடுதல்
15. முகப்பு வளவு பத்தியில் கோலமிடுதல்
16. அரசாணைக்கால் கட்டுகிற இடத்தில் கோலமிடுதல்
17. மாற்றுக் கட்டுதல்
18. அரசாணைக்கால் கட்டுதல்
19. பங்காளிகளைக் கொண்டு இசைவு பிடிமானம், மொய்ப்பணம் ஏடு தயாரித்தல்
20. கழுத்துரு வாங்க வருகிறவர்களுக்குத் தயாராக இருத்தல் (மாப்பிள்ளை வீட்டார்)
21. மாப்பிள்ளை அழைப்புக்குரிய பொருள்களைத் தாம்பளத்தில் எடுத்து வைத்தல்
22. சர்வச் சட்டியில் தேங்காய், வெற்றிலை, பாக்கு
23. சிலேட் விளக்கு மெழுகுதிரி போட்டு வைத்தல்
24. சரவிளக்கு தயார் செய்தல்
25. பூரம் கழித்தல், காப்பு கட்டுதல், பகவத்யானம், மணவறைச் சடங்குகளுக்குரிய பொருள்களை எடுத்து வைத்தல்

## கல்யாணத்தன்று பெண் வீட்டில்

26. பெண்ணுக்கு பூரம் கழித்தல்
27. கழுத்துருவுக்குப் பொன் கொடுத்தல்

28. மாப்பிள்ளை அழைக்கும் இடத்திற்கு வேண்டியதை செய்தல்
29. மாப்பிள்ளை சுவாமி தரிசனத்திற்கு ஏற்பாடு செய்தல்
30. மாப்பிள்ளைக்கும் உடன் இருப்பவர்களுக்கும் பலகாரம் கொடுத்தல்
31. மாப்பிள்ளை அழைப்பு
32. (உள்ளூராக இருந்தால்) மாப்பிள்ளை அறிதல்
33. முகப்புப் பத்தியில் விளக்கு வைத்து ஆரத்தி எடுத்தல்
34. பெண்ணுக்கு பகவத்யானம் காப்புக் கட்டுதல் (மாமக்காரர்)
35. மாப்பிள்ளைக்கு பகவத்யானம் காப்பு கட்டுதல் (மாமக்காரர்)
36. திருப்பூட்டுத் தாம்பளத்தை வைத்து மாங்கல்ய பூஜை செய்து உள் வீட்டில் வைத்தல்
37. திருப்பூட்டு தாம்பளத்தைப் பெண்ணின் மாமக்காரர் எடுத்து வந்து வந்திருப்போரிடம் ஆசீர்வாதம் வாங்குதல்
38. திருப்பூட்டுதல்
39. வந்திருப்போருக்கு மிட்டாய், ரொட்டி வழங்குதல்
40. மாமக்காரர் இருவரும் பெண், மாப்பிள்ளையை முகப்பு வரை கூட்டிப் போய் எல்லோருடைய ஆசீர்வாதமும் பெறுதல்
41. இசைவு பிடிமானம் எழுதல்
42. திருப்பூட்டுச் சடங்கு (மணமகனுக்கு : தாய், சகோதரி)
43. மணவறை
44. வேவு எடுத்தல்
45. பணம் எழுதுதல்
46. கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்
47. சீராட்டுக் கொள்ளுதல்
48. மஞ்சள் நீராடுதல்
49. காப்புக் கழற்றிக் கால் மிஞ்சி இடுதல் – நாணா வகைச் சடங்கு

50. காப்பு அவிழ்த்தல்
51. பிள்ளை எடுக்கிக் கொடுத்தல்
52. அரசாணைக்காலுக்குப் பொங்கல் இடுதல்
53. பெண் சொல்லிக் கொள்ளுதல்
54. கட்டுச் சோறு கட்டிக் கொடுத்தல்
55. குடி அழைப்பு
56. அரசாணைக்கால் அவிழ்த்தல்
57. மாப்பிள்ளை வீட்டில் வேவு எடுத்தல்
58. மாப்பிள்ளை வீட்டில் ஸ்ரீதன உண்டியல் எழுதிக் கொடுத்தல்
59. மாப்பிள்ளை பெண்ணுக்குக் காய்ச்சி ஊற்றுதல் – ஆயா வீடு

## மாப்பிள்ளை வீட்டார் செய்பவை

1. பெண் அழைப்புக்கு வாசலில் கோலமிடல்
2. மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தல்
3. பங்காளியைக் கொண்டு இசைவுப் பிடிமானம்
4. பெண் வீட்டிற்குப் போய் கழுத்துரு, சிறுதாலி, ஜோடிப்புகள் வாங்கி வருதலும், சேலை பரப்புதலும்
5. கழுத்துரு கோர்த்தல்
6. முளைப் பாலிகை தயார் செய்தல்
7. கோட்டை நெல் கட்டுதல்
8. வள்ளுவப்பை தயாரித்தல்
9. நடுவீட்டில் பத்தியில் அரிசி அளத்தல்
10. சர்வச் சட்டியில் தேங்காய், வெற்றிலை, பாக்கு
11. திருப்பூட்டுவதற்குக் கொண்டு செல்ல வேண்டிய தாம்பளம் தயார் செய்தல்
12. கழுத்துருவுக்குப் பொன் கொடுத்துனுப்புதல்

## கல்யாணத்தன்று

13. மாப்பிள்ளை தன் வீட்டிலிருந்து புறப்புடுதல்
14. பெண் வீட்டார் மாப்பிள்ளை அழைக்க வரும் இடத்திற்கு வந்ததும் கோயிலுக்கு சென்று வழிபடுதல்
15. மாப்பிள்ளை அழைப்பு
16. பகவத்யானம், காப்புக் கட்டுதல், பூமணம் இடுதல்
17. திருப்பூட்டுதல்
18. இசைவுப் பிடிமானம் கையொப்பமிடல்
19. கல்யாண வேவு எடுத்தல்
20. பணம் எழுதுதல்
21. குடி அழைப்பு
22. பெண் அழைப்பு
23. வளவு முகப்புப் பத்தியில் விளக்கு வைத்து ஆரத்தி
24. பெண் அழைப்புச் சடங்கு
25. வந்திருப்பவர்களுக்கு ரொட்டி, மிட்டாய் வழங்குதல்
26. மாப்பிள்ளை பெண், பால் பழம் சாப்பிடுதல்
27. பெண் வீட்டார் எடுக்கும் வேவு
28. மாப்பிள்ளை வீட்டார் எடுக்கும் வேவு
29. ஸ்ரீதன உண்டியல் எழுதி வாங்குதல்
30. பெண் வீட்டிற்கு 3 வழிகளுக்குப் போய் வருதல்
31. காய்ச்சி ஊற்றிக் கொடுத்தல்

## நகரத்தார் திருமண நிகழ்ச்சிகள்

## கல்யாணம் பேசி முறைச்சிட்டை எழுதிக் கொள்ளுதல்

முறைச்சிட்டை எழுதிக் கொள்ளும் போது கழுத்துருவுக்கு பொன்கொடுக்கும் நேரம், திருப்பூட்டும் நேரம், குடி அழைப்பு பெண் அழைப்பு நேரங்கள் எழுதிக் கொள்வார்கள்.

## பேசி முடித்துக் கொள்ளுதல்

திருமணத்தை உறுதி செய்து கொள்ளும் நிகழ்ச்சி இதை நிச்சயதார்த்தம் அல்லது கெட்டி பண்ணிக் கொள்ளுதல் என்றும் கூறுவர். இந்நிகழ்ச்சி மணமகள் வீட்டில்தான் நடைறெும். பையனுடைய பெற்றோர்கள் உற்றார் உறவினருடன் விரலி மஞ்சள், வெற்றிலை, பாக்கு, கற்கண்டு, பழம் முதலியவற்றுடன் வருவார்கள். திருமணம் பேசிக் கொண்ட விபரங்களை இன்னார் மகனுக்கு இன்னார் மகளை திருமணம் செய்வதாகவும், இன்னின்ன முறைகள் பெண்வீட்டாரும் பையன் வீட்டாரும் செய்து இரண்டு பிரதிகள் எழுதி தாம்பாளத்தில் மலர், வெற்றிலைப்பாக்கு, மஞ்சள் முதலியன வைத்து இருவீட்டுப் பெரியவர்களும் ஒருவருக்கொருவர் கொடுப்பார்கள். பிறகு சிற்றுண்டி அளித்ததும் பிள்ளை வீட்டார் பெண் வீட்டாரிடம் சொல்லிக் கொண்டு செல்லும்போது அவர்களைக் கௌரவிப்பதற்காகப் பழம், வெற்றிலைப் பாக்கு, ரொக்கம் முதலியன கொடுத்து வழியனுப்புவார்கள், இந்நிகழ்ச்சி இப்பொழுது காலம், செலவு கருதி திருமணத்திற்கு முதல்நாள் வைத்துக்கொள்கிறார்கள்.

## முகூர்த்தக் கால் ஊன்றுதல்

திருமணத்திற்கு ஒரு வாரம் முன்னர் மணமகன், மணமகள் இருவருடைய வீடுகளிலும் நடைபெறவேண்டிய நிகழ்ச்சி, ஒரு நல்ல நாளில், குறிப்பிட்ட நல்ல நேரத்தில் கொட்டகை போடுபவர் ஒருவரை வைத்து வீட்டின் நடுவாசலில் ஈசானிய மூலையில், மாவிலையைக் கட்டி ஊன்றி வைப்பார்கள். பிறகு அதற்குத் தேங்காய் உடைத்து கற்பூரம் தீபம் காட்டுவார்கள். முகூர்த்தக்கால் ஊன்றிய பிறகு இருவீட்டாரும் திருமணச் சடங்குகள் எல்லாம் முடிந்து, காய்ச்சி ஊற்றிக் கொள்ளும் வரை எந்தவிதமான துக்க நிகழ்ச்சிகளிலும் பங்கு கொள்ளக்கூடாது.

## கல்யாணம் சொல்லுதல்

மாப்பிள்ளை வீட்டார் மாப்பிள்ளைக்கு அப்பத்தாள், ஆயா வீடுகளில் மணமக்களின் தந்தை அல்லது மூத்த சகோதரர்

தேங்காய் சட்டி கொண்டு சென்று கல்யாணம் சொல்லும் வீட்டில் தடுக்கில் உட்கார்ந்து என் மகனுக்கு (அல்லது மகளுக்கு) இன்ன நாளில் கல்யாணம் என்று சொல்லி அழைக்க வேண்டும். அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு வெற்றிலை பாக்குடன் ரூபாய் வைத்துத் தருவார்கள். அதுவே பாக்குப் பணம் ஆகும். முகூர்த்தக் கால் ஊன்றும் நாளில் கல்யாணம் சொல்லுவார்கள். மாப்பிள்ளை கல்யாணமாக இருந்தால் சடங்கு செய்பவர்களுக்கு தேங்காய் வைத்துச் சொல்ல வேண்டும். பெண் கல்யாணமாக இருந்தால் அத்தைகளுக்குத் தேங்காய் வைத்துச் சொல்ல வேண்டும்.

## கோயிலில் பாக்கு வைத்தல்

இரு வீட்டாரும் அவரவர்கள் நகரக் கோயிலில் மூன்று நாள் முன்பாகப் போய் பாக்கு வைக்க வேண்டும். எடுத்துக்காட்டாக 4ஆம் தேதி திருமணம் என்றால் 1ம்தேதி காலை முதல் மாலைக்குள் பாக்கு வைக்க வேண்டும். மணமகன், மணமகள் இருவரின் கோயில் பிரிவு வகை மற்றும் மணமக்கள் பெயர், தகப்பனார் பெயர் மற்றும் விலாசங்கள், கல்யாண நாள், நேரம், இடம் ஆகியவற்றைக் குறித்துக் கொண்டு பங்காளிகள் யாரேனும் ஒருவர் போய்ப் பாக்கு வைத்துப் பதிவு செய்து அதற்குரிய காணிக்கை செலுத்தி வரவேண்டும். இதற்கு திருமண அழைப்பிதழும், வெற்றிலைபாக்கும் கொண்டு செல்ல வேண்டும் அதுவே நமது சமூகத்தில் திருமணத்தைப் பதிவு செய்யும் முறையாகும்.

இரணிக்கோயில், பிள்ளையார்பட்டிக் கோயிலார் இருவரும் தத்தம் கோயில்களில் பாக்கு வைப்பதோடு இளையாற்றங்குடி கோயிலிலும் பாக்கு வைப்பது மரபு.

திருமணத்திற்கு முதல் நாள் அந்தக் கோயிலிலிருந்து மணமக்கள் வீட்டிற்கு இரண்டிரண்டு மாலைகள் வரும். அதைப் பெண்கள் சங்கு ஊதி வாங்கி நடுவீட்டில் வைப்பார்கள். மாப்பிள்ளை வீட்டில் வாங்கி வைத்த மாலைகள் இரண்டில் ஒன்றை மாப்பிள்ளை திருமணத்தன்று அணிந்து கொள்ள வேண்டும். மற்றொன்றை திருப்பூட்டச் செல்லும்பொழுது கொண்டு சென்று முதலில் மாப்பிள்ளை

பெண்ணுக்கு அம்மாலையை அணிவிப்பார். பெண் வீட்டில் வாங்கி வைத்த மாலைகளில் திருமணத்தன்று பெண் பகவனம் செய்து கொள்ளும்போது அணிந்து கொள்வது வழக்கம். மற்றொன்றை அரசாணிக்காலில் கட்டிவிடுவார்கள். மணமகனுடைய தந்தையோ அல்லது பங்காளிகளில் ஒருவரோ அவரவர்களுடைய சொந்த ஊரில் உள்ள நகரச் சிவன் கோயிலுக்குச் சென்று மேளத்திற்கு எழுதிவைக்க வேண்டும். திருமணம் முடிந்தபின் மணமகனை அந்த ஊர்ப் புள்ளிகளில் ஒருவராக ஏற்றுக் கொள்வார்கள்.

## முளைப்பாலிகை தயார் செய்தல் (மொளப்பாரி)

மணமக்கள் வீட்டில் முளைக்கும் திறனுள்ள நெல், உளுந்து, கடலை, கொள்ளு, எள், சாமை, தினை, துவரை, பயறு ஆகிய ஒன்பது வகைத் தானியங்களும் ஒரு பானையில் போட்டு ஊருணித் தண்ணீர் ஊற்றி வைத்து விடுவார்கள். பிறகு அந்த தண்ணீரை வடித்துவிட்டு மீண்டும் தண்ணீர் ஊற்றி வைப்பார்கள். திருமணத்திற்கு முதல் நாள் ஒரு பாத்திரத்தில் சிவப்புத் துணி வைத்து அதில் இந்தத் தானியங்களை வைத்து இறுகக்கட்டி வைத்துவிடுவார்கள். இப்படி செய்தால் அதில் உள்ள எல்லா தானியங்களும் முளை விட்டு இருக்கும். இதன் நோக்கம் திருமணம் செய்து கொள்ளும் மணமக்களும் அவர்கள் குடும்பமும் முளைவிட்டுப் பல்கிப் பெருகி வாழ வேண்டும் என்பதே. திருமண நாளன்று மொளப்பாரியை மணமகள் வீட்டிற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

## கோட்டை நெல் கட்டுதல்

ஒரு மரக்கால் நெல்லை (பெரியபடி 2) ஒரு துணிப் பையில் கட்டி வைக்கோல் பிரியால் பந்து போல் சுற்றிக் கட்ட வேண்டும். இதை திருப்பூட்டப் போகையில் மணமகன் வீட்டார் மணமகள் வீட்டுக்கு எடுத்துச் செல்ல வேண்டும். இதை சாமி வீட்டில் நடுவில் வைப்பார்கள். மணமகன் அரசா(ணி)ணைக்கால், அக்னி ஆகியவற்றை வலம் வந்தவுடன் இந்தக் கோட்டையை தாண்டி சாமி வீட்டுக்குள் செல்ல வேண்டும்.

## திருமணத்திற்கு முதல் நாள்
## கூடி ஆக்கி உண்ணுதல்

திருமணத்திற்கு முதல்நாள் உறவினர்கள் எல்லாம் கூடி ஆக்கி உண்ணும் நிகழச்சி. நம்மில் பெரும்பாலானோர் படைப்பு என்று நம் முன்னோரை வழிபடுகின்ற நாளாக இதனை அமைத்துள்ளனர். அன்றைய தினம் அவரவர் வழக்கப்படி குலதெய்வங்களுக்குப் பணம் முடிப்பார்கள்.

## திருவிளக்கு ஏற்றுதல்

அப்பத்தாள் அல்லது அத்தையை அழைத்து நடுவீட்டில் விளக்கு ஏற்றுவது திருவிளக்கு ஏற்றுதல் என்று அழைக்கப்படுகிறது.

## மனை போடுதல்

பெண் வீட்டில் சுமங்கலிப் பெண்கள் ஊருணியிலிருந்து மனைக்கு மண் அவரவர்கள் ஊர் வழக்கப்படி எடுத்துவருவார்கள். எடுத்து வந்த மண்ணைக் குழைத்து 5 செங்கற்களின் மேல் வைத்து சங்கு ஊத அதன் மேல் மனையை எடுத்து வைக்க வேண்டும்.

வெளியூர்த் திருமணமாக இருந்தால் பெண் வீட்டில் மட்டும் இச்சடங்கு நிகழும். உள்ளூராக இருந்தால் இருவீட்டிலும் நடக்கும். பங்காளி மற்றும் வீட்டுப் பெண்கள் வளவுக்குள் திருமண வீட்டிற்கு எதிரே மனை போடுவார்கள். பெண் வீட்டில் இரட்டை மனையும் மாப்பிள்ளை வீட்டில் ஒற்றை மனையும் வைப்பது மரபு.

## கொழுமேளம்

மேளக்காரர்கள் வந்ததும் சங்கு ஊதி நல்ல நேரத்தில் கொழுமேளம் வாசிக்க செய்ய வேண்டும்.

## மாப்பிள்ளைக்கு மிஞ்சி அணிவித்தல்

திருமணத்திற்கு இரண்டொரு தினங்களுக்கு முன் மணமகன் கால்களில் இரண்டாவது விரல்களில் வெள்ளியினாலான மிஞ்சியை ஆசாரியை வரச் சொல்லி தாய்மாமன் அணிவிப்பார்.



3

## தும்பு பிடித்தல்

நம் சமூகத்தினர் எந்த ஒரு விசேஷத்திற்கும் கோலமிடுதல் வழக்கம். முதலில் தும்பு பிடித்தல் வேண்டும். ஏடுடன் கூடிய நூல் கோல மாவில் நனைத்து இரு கைகளால் பிடித்து கீழ்க்கண்ட வடிவத்தில் அறைக் கதவின் இருபுறமும் போட வேண்டும். ஒருவர் கயிற்றை பிடித்துக் கொண்டு இன்னொருவர் அக்கயிறை சுண்டிவிட்டால் இவ்வடிவம் பதிந்து விடும். மூன்று வரிகள் வருமாறு போடவும்.



## நடுவீட்டுக் கோலம்

கோலத்தை சுற்றிலும் இருவரிசைப் புள்ளிகள் குத்த வேண்டும். மாறாக இதுபோன்ற சிறுகோடுகள் இழுத்தும் விடலாம்.

## பாப்பாரக் கோலம்

சடங்கு கழிப்பதற்கும் பூரம் கழிப்பதற்கும் இவ்விரு கோலங்களும் போட வேண்டும். பெண் நடுவீட்டுக் கோலத்தில் கிழக்கு முகமாக நிற்கவேண்டும்.

அத்தை அல்லது அம்மான் மனைவி பாப்பாரக் கோலத்தில் பெண்ணிற்கு எதிரே நின்று கழித்தல் வேண்டும்.

## மாற்றுக்கட்டுதல்

திருமண மேடைக்கு மேல் நீல நிறம் அல்லது பிற நிறங்களில் (கறுப்பு நிறம் தவிர) மாற்றுச் சேலை இரண்டை சலவைத் தொழிலாளி (தற்பொழுது பங்காளிகள்) திருமணத்திற்கு முதல் நாள் கட்டிவிடுவார்கள். அக்காலத்தில் பல்லி முதலான பூச்சிகளோ, தூசிகளோ, மணமக்கள் மீது விழுந்துவிடாமல் பாதுகாப்பதற்காகவே இப்படி மாத்துக் கட்டியிருக்கிறார்கள்.

## அரசா(ணி)ணைக்கால் கட்டுதல்

முன்காலத்தில் மன்னர்கள் நேரில் வந்து அவர்கள் முன்னிலையில் திருமணம் நடைபெற்றதாகவும் ஒரே நேரத்தில் பல திருமணங்கள் நடைபெறும் அளவு மக்கள் தொகை பெருகியதும் அரசன் நேரில் வர இயலாத நிலையில் அரசன் ஆணையை முன்னிறுத்தித் திருமணங்கள் நடைபெற்றிருக்கலாம். அதுவே பின்னர் அரசாணிக்காலாக மாறியிருக்கலாம்.

பெண் வீட்டில் மணைக்கு எதிரில் கோலமிட்ட இடத்தில் பங்காளிகளைக் கொண்டு அரசாணி மேடையை வைத்து அதிலுள்ள பாலை ஊற்றி பவளத்தைப் போட வேண்டும். அதன் மேல் மூங்கில் கம்பை ஊன்றி அதனைச் சுற்றிலும் கம்பு தெரியாதவாறு கிளுவை, பாலை இரண்டு குச்சிகளையும் இணைத்து அரச இலை, மாவிலை முதலியவற்றால் சுற்றி கீழ் இருந்து மேலாக கயிறு கொண்டு கட்ட வேண்டும்.

இதன் அருகில் உயரம் குறைந்த ஸ்டூலில் சர விளக்கு வைத்து நல்லெண்ணெய்த் தீபமிட வேண்டம். விளக்கைத் திருமணத்தன்று கலையில் ஏற்றி நிகழ்ச்சிகள் முடியும் வரை எரிய விட வேண்டும்.

## திருமணத்தன்று பெண் வீட்டில்

### பூரம் கழித்தல்

மணமகளின் கன்னித் தன்மையை நீக்கி அவளை இல்லறத்திற்கு உரியவளாக மந்திர பூர்வமான ஆக்குதலே இதன் நோக்கம். திருமணத்தன்று அதிகாலையில் மணமகளை நீராடச் செய்து, ஒரு சர மாலை மட்டும் கழுத்தில் அணிவித்து மணமேடைக்குப் பக்கத்தில் தடுக்கில் நிற்கச் செய்து மணமகளின் அம்மான் மனைவி அல்லது அத்தையோ அல்லது தாயோ பூரம் கழிப்பார்கள்.

மணமகளின் உடலில் ஏழு இடங்களில் அதாவது தலையிலும் தோள்பட்டைகள் இரண்டிலும், இடுப்பில் இரண்டு பக்கங்களிலும், இரண்டு பாதங்களிலும் வேப்பிலையை வைத்து இரும்பு சத்தகத்தினால்

அல்லது மரக் குச்சியினால் தட்டி விடுவார்கள். சில வட்டகையில் புரோகிதர் விநாயகர் பூஜை, வருண கும்பபூஜை செய்து பூரம் கழிப்பார்கள். இதன் பிறகு மீண்டும் மணமகள் ஒருமுறை நீராட வேண்டும்.

மாப்பிள்ளை வீட்டிலிருந்து புறப்படும் போது மணமகனுக்கு அப்பத்தாள் மணமகனை நடுப்பத்தியில் கோலத்திற்கு முன் நின்று அழகு ஆரத்தி எடுப்பார்கள். அழகு ஆரத்தியில் மூன்று ஆரத்திகள் இருக்கும். சதுரவடிவில் 4 திரிகளும், கூம்பு போன்ற இரு ஆரத்திகளிலும் ஒவ்வொரு திரியும் இருக்கும். மணமகனுக்கு முன்பு சிலேட்டு விளக்கு (அரிக்கேன் விளக்கு) வைத்து ஆரத்தி எடுத்து விபூதி பூசி வழியனுப்பி வைப்பார்கள். அப்பத்தாள் இல்லையென்றால் அத்தை அல்லது வீட்டிற்குப் பெரிய பெண்டிர்கள் செய்வார்கள்.

உள்ளூர்த் திருமணமாக இருந்தால் மாப்பிள்ளை திருமணத்தன்று காலையில் பங்காளிகள் உறவினர்களுடன் பிள்ளையார் கோயிலுக்குச் சென்று அர்ச்சனை செய்து சாமி கும்பிடுதல் மரபு, வெளியூர்த் திருமணமாக இருந்தால் அழைப்பு நிகழும் கோயிலிலேயே இந்த அர்ச்சனை வழிபாடுகள் நிகழும்.

மாப்பிள்ளை தகப்பனார் அல்லது வீட்டிற்குப் பெரியவர்கள் தேங்காய்ச் சட்டியுடனும், திருப்பூட்டுத் தாம்பளத்துடனும், தாயார் சடங்குத் தட்டுடனும், சகோதரி பால் பானையுடனும் சங்கு ஊதி மாப்பிள்ளையை அழைத்துச் சென்று மாமக்காரர், தாயார், சகோதரியுடன் புறப்பட்டு செல்ல வேண்டும்

## கழுத்து உறுவிற்கு பொன் கொடுத்தல்

கழுத்துரு என்பது மணமகள் வீட்டார் செய்ய வேண்டிய அணிகலன்களில் ஒன்று. ஆயினும் மணமகன் வீட்டாருடைய தாலிதான் அணிவிக்கப்பட வேண்டும் என்ற பழக்கத்தின் காரணமாக அவர்களுடைய பொன்னும் இந்த பெரிய தாலியில் சேர்ந்திருக்க வேண்டும் என்ற எண்ணத்தில் ஒரு குறிப்பிட்ட நல்ல நாளில் மணமகன் வீட்டார் பங்காளிகளையும், சொந்தக்காரர்களையும் அழைத்து கொண்டு பொன் ,சந்தனம், குங்குமம், பூ, வெற்றிலை

பாக்கு, தேங்காய் முதலியன கொண்டு வருவார்கள். மணமகள் வீட்டில் அவர்களுடைய பங்காளிகள், உறவினர்கள், நண்பர்கள் முன்னிலையில் பொற்கொல்லர் ஒருவர் வந்து அவர்கள் தருகின்ற பொன்னை வாங்கித் தட்டிக் கொடுப்பார். இந்தக் கழுத்து உரு செய்வதற்கு நீண்ட நாட்கள் ஆகும் என்பதால் முன்கூட்டியே தங்கம் சேர்ப்பதற்கு இடம் வைத்துச் செய்து விடுவார்கள். திருமணத்தன்று காலை இந்நிகழ்ச்சியை நடத்தி மணமகன் வீட்டார் தரும் தங்கத்தை கழுத்துருவில் சேர்த்துவிடுவார்கள்.

## மாப்பிள்ளை அழைப்பு

திருமணத்தன்று காலையில் மாப்பிள்ளை வீட்டார் மணமகள் ஊர் பொது இடத்தில் (கோயிலில்) வந்து இருப்பார்கள். மணமகள் வீட்டார் ஒரு பெரிய தட்டில் மணமகனுக்கு சரிகை வேட்டி, துண்டு, மாலை, சங்கிலி, கெடிகாரம், மோதிரம் முதலியன எடுத்துக் கொடுத்து மணமகன் தங்கியிருக்கும் இடத்திற்கு மேளவாத்தியம், சங்கு முதலியன ஒலிக்க மணமகள் வீட்டு உறவினர்கள் ஊர்வலமாக வந்து அவற்றை மாப்பிள்ளைக்கு அணிவித்து அழைத்துச் செல்வார்கள். மணமகனின் தந்தை ஒரு சட்டியில் பாக்கு, மஞ்சள் இரு தேங்காய்களை வைத்து எடுத்துக் கொண்டு வருவார்.

## பெண்ணெடுக்கிக் காட்டுதல்

இது பழையமரபு. அக்காலத்தில் ஏழெட்டு வயதிற்குள் திருமணம் முடித்து விடுவார்கள். அப்போது சிறுமியாக உள்ள மணமகளைத் தூக்கி மாப்பிள்ளை வீட்டாருக்குக் காட்டுவார்கள். இப்போது அவ்வழக்கம் இல்லை. எனவே, மாப்பிள்ளை பெண் வீட்டிற்குள் நுழையும் போது பெண்ணைப் பெண்ணின் அத்தை அழைத்து வந்து மாப்பிள்ளைக்கு காட்டுதல் இச்சடங்கு ஆகும்.

## விளக்கு வைப்பது

மாப்பிள்ளை அழைத்து பெண் வீட்டிற்குள் கூட்டி வரும்போது நடுப்பத்திக் கோலத்தில் முன் நிற்க வைத்து பெண்ணின் அப்பத்தாள் அல்லது அத்தை வந்து ஆரத்தி எடுத்து விபூதி பூசி மாப்பிள்ளையை நடுவாசலில் கிழக்கு முகமாக உட்கார வைப்பார்கள்.

## பகவத்யானமும் காப்புக் கட்டுதலும்

திருமண வாழ்வு சிறக்க இறைவனை எண்ணி வழிபடுதலே பவகத்யானம், மணமகனுக்கு முதலிலும் மணமகளுக்குப் பிறகும் தனித்தனியே புரோகிதர் ஒருவர் சங்கல்பம் செய்து வைத்து கணபதி பூஜை செய்வார். பிறகு தாய் மாமன், மணிக்கட்டில் ஒரு சிறு வெள்ளி நாணயத்தை (தற்போது 25 காசு) சிகப்புத் துணியில் முடித்து நுனி உடையாத விரலி மஞ்சளையும் சேர்த்துக் கட்டிவிடச் செய்வார்.

## திருப்பூட்டுதலுக்கு ஆசிர்வாதம் வாங்குதல்

இருவருக்கும் காப்புக்கட்டி முடிந்ததும் மணமகன் வீட்டிலிருந்து கொண்டுவந்த தாம்பளத்தில் உள்ள திருமாங்கல்யத்துக்கு (கழுத்துரு) இலட்சுமி பூஜை செய்து மணமகளுடைய தாய்மாமனும் அவர்தம் மனைவியும் வீட்டுப் பெரியவர்களிடம் காட்டி வாழ்த்துப் பெற்று நடுவீட்டில் கொண்டுபோய் வைத்துவிடுவார்கள். மணமக்கள் இருவருக்கும் பகவத்யானமும், காப்புக் கட்டுதல் நடைபெறும்போது அவரவர்கள் வீட்டுப் பெரியவர்கள், சுற்றத்தார்கள் அவர்களைப் பூமணம் இட்டு வாழ்த்துவார்கள்.

## பூமணம் இடுதல்

பகவணம் செய்யும் போது மலர்களை பசும்பாலில் நனைத்து மணமக்கள் உடலில் மணிக்கட்டு , முழங்கை, தோள்பட்டை ஆகிய மூன்று இடங்களில் தொட்டு வாழ்த்துதலே பூமணமாகும். இதை மூன்று முறை செய்ய வேண்டும். முதலில் மாமக்காரர்தான் செய்ய வேண்டும். அதேபோல் மாமக்காரர்தான் முடித்து வைக்க வேண்டும். மணவறையிலும் பூமணம் இடவேண்டும்.

## அரிமணம் இடுதல்

பாத்திரத்தில் இருக்கும் முளைவிட்ட தானியங்களை ஐந்து கிண்ணங்களில் கொஞ்சம் எடுத்துப் போட்டு வாழ்த்துதல் அரிமணமாகும். பகவணத்தின் போது மணமக்கள் இருவருக்கும்

அரிமணம் இடுதல் நடைபெறும். பின்னர் மணவறையின்போதும் தம்பதிகளுக்கு எல்லோரும் அரிமணம் இடுவார்கள்.

## திருப்பூட்டுதல்

மணமகளுக்கு, மணமகனின் வீட்டார் கொண்டு வந்த ஆடைகளை அணிவித்து நன்கு அலங்கரித்து மணமேடை மீது கிழக்கு முகமாக நிற்கச் செய்வார்கள். பின்னர் மணமகளை அழைத்து மணமகனுக்கு எதிரே நிற்கச் செய்வர். மணமகளின் கைகள் இரண்டையும் ஏந்தச் செய்து அதில் பச்சரிசி, தேங்காய் முதலியவற்றைக் கொடுப்பார்கள். தேங்காயின் குடுமிப்பகுதி மேல்நோக்கி இருக்க வேண்டும். மணமகன் கோயிலிலிருந்து வந்துள்ள திருநீற்றை தன் கழுத்திலும் நெற்றியிலும் பூசிக்கொண்டு மணமகளுக்கும் அதேபோல் அணிவிக்க வேண்டும். பின்பு பெரியவர் ஒருவர் துணையுடன் அவர் எடுத்து தருகின்ற கழுத்துருவை வாங்கி மேல் பாகத்தில் திருமாங்கல்யம் உள்ள பகுதி வருமாறு பெண்ணுக்கு அணிவித்துக் கழுத்தில் பின்புறம் மூன்று முடிச்சுப் போட வேண்டும். முதல் இரண்டு முடிச்சுகளை மாப்பிள்ளையும் மூன்றாவது முடிச்சை நாத்தனாரும் போடுவது மரபு. பிறகு தாலியை அணிவிக்க வேண்டும். அதன் பின்னர் திருமாங்கல்யத்திலும் மூன்று முடிச்சுகளின் மீதும் சிறு தாலியிலும் மஞ்சள் தொட்டு வைத்துக் குங்குமம் இட வேண்டும்.

மணமகள் கையில் உள்ள பச்சரிசி, தேங்காய் முதலியவற்றை தாம்பாளத்தில் வைத்துவிட்டு, மணமக்கள் இருவரும் மூன்று முறை மாலை மாற்றிக் கொள்ள வேண்டும். மணமகள்தான் முதலில் மாலையிடவேண்டும். பிறகு தம்பதிகள் ஒருவருக்கொருவர் இனிப்பை பரிமாறிக் கொள்வது இன்றைய வழக்கம்.

திருப்பூட்டி முடிந்ததும் மணமக்கள் மாமக்காரருடன் வளவு, முகப்பிலுள்ளவர்களிடம் போய் வணங்கி ஆசீர்வாதம் பெற வேண்டும். திருப்பூட்டுதலின் போதும், மாலை மாற்றும் போதும் கெட்டிமேளம் வாசிக்கச் சொல்ல வேண்டும். பிறகு அனைவருக்கும் ரொட்டி, மிட்டாய், சர்பத் கொடுக்க வேண்டும்.

## திருப்பூட்டும் முறைகள்

நகரத்தார் திருமணங்களில் திருப்பூட்டுதல் மூன்று விதமாக நடைபெறுகிறது. மேலவட்டகை எனப்பெறும் வலையபட்டி, மேலைச்சிவல்புரி, குழிபிறை ஆகிய பகுதிகளில் மாப்பிள்ளை மணையில் நிற்க பெண் கீழே நிற்க திருப்பூட்டப்படுகிறது. கீழ்வட்டவகை எனப்பெறும் காரைக்குடி, தேவகோட்டை, பள்ளத்தூர் ஆகிய பகுதிகளில் பெண் மனைமீது நிற்க, மாப்பிள்ளை கீழே நிற்க திருப்பூட்டப்படுகிறது. தெற்கு வட்டகை எனப்பெறும் நாட்டரசன் கோட்டை, ஒக்கூர், அலவாக்கோட்டை ஆகிய பகுதிகளில் அறைக்குள் மாப்பிள்ளையும் பெண்ணும் சரிசமமாக நின்று திருப்பூட்டுதல் நடைபெறுகிறது.

## இசைவு பிடிமானம் எழுதுதல்

இசைவு பிடிமானப் புத்தகங்கள் அச்சிடப்பட்டு கிடைக்கின்றன. அதில் தனித்தனியே இரு தரப்பாரும் அவரவர் கோயில் பிரிவுகள் விவரத்தினைப் பங்காளியைக் கொண்டு எழுதி மணமக்களின் தந்தைமார்கள் இருவரும் நடுவீட்டில் அமர்ந்து கையெழுத்துச் செய்து, மாப்பிள்ளை வீட்டார் எழுதியது பெண் வீட்டிலும் பெண் வீட்டார் எழுதியது மாப்பிள்ளை வீட்டிலும் இருக்கும்படியாக மாற்றிப் பெற்றுக் கொண்டு, வைத்துக் கொள்ளவேண்டியது. இதில் எழுதிய பங்காளிகளும் கையொப்பம் இடவேண்டும்.

## திருப்பூட்டுச் சடங்கு

மணமகனின் தாயார் அல்லது சகோதரி அல்லது இருவரும் செய்கின்ற சடங்கு இது. ஒரு சடங்குத் தட்டில் ஏழு கிண்ணங்கள் இருக்கும். அவற்றில் பிள்ளையார், வெற்றிலை பாக்கு, ஒன்றிலும் மற்றவை ஒவ்வொன்றிலும் மஞ்சள், விபூதி, பச்சரிசி, உப்பு, புளி, பஞ்சு முதலியனவும் வைத்திருப்பார்கள். ஒரு படியில் நிறைய நெல் வைத்து அதன் மேல் கத்தரிக்காய் ஒன்று வைத்திருப்பார்கள். (இதனை நிறை நாழி என்பர்) ஒரு கெண்டிச் செம்பில் (மூக்கு வைத்த செம்பு) தண்ணீர் வைத்திருப்பார்கள். மணையின் மீது

கிழக்கு, முகமாக மணமகளை நிற்க வைத்து, கீழே தடுக்கு போட்டு நின்று கொண்டு சடங்கு செய்வார்கள்.

முதலில் சடங்குத் தட்டில் உள்ள விபூதியை வலக் கரத்தால் எடுத்து சடங்கு செய்கிறவர்கள் தான் பூசிக் கொண்டு, பிறகு பெண்ணுக்குப் பூச வேண்டும். இந்த ஏழு கிண்ணங்கள் ஒவ்வொன்றையும் மூன்று மூன்று முறை தொட்டு விபூதியைத் தானும் கழுத்தில் பூசிக்கொண்டு பெண்ணுக்கும் கழுத்தில் பூச வேண்டும். இவ்வாறு இருபத்தியோறு முறை பூசியதும் வலக்கரத்தில் கெண்டிச் செம்பை எடுத்துக் கொண்டு மணமகள் கையில் ஒரு வெற்றிலையைக் கொடுத்து முதலில் நிறை நாழிச் சடங்கு செய்பவர் இடக்கையால் பிடித்துக் கொண்டு வலக் கையினால் கெண்டிச் செம்புத் தண்ணீரை மணமகள் கையில் உள்ள வெற்றிலையில் ஊற்றுவார். மணமகள் அந்த நீரைப் பாதங்களில் வடித்துவிட்டு இரு கைகளினாலும் வெற்றிலையை நெற்றியில் வைத்து வணங்குபவர். இச்சடங்கு மூன்று முறை நிகழும். இது போலச் சிலேட்டு விளக்கு, பிள்ளைக் குழவி, முதலியவற்றை வைத்துக் கொண்டு சடங்கு செய்வர். சடங்கு முடிந்ததும் சிலேட்டு விளக்கை நேராக வீட்டுக்குள் வைக்க வேண்டும். மற்ற பொருள்களை பின்புறமாக சுற்றி இடவலமாக கொடுத்து வீட்டுக்குள் வைக்க வேண்டும்

## மணவறைச் சடங்கு

புரோகிதர் இச்சடங்கை செய்வார். விநாயகர் பூஜை, வர்ணகும்ப பூஜை, அக்கினி வளர்த்து நவக்கிரக ஹோமம், ஆயுள் ஹோமம், தீவலம் வருதல், அரிமணம் இடுதல், பூமணம் இடுதல் ஆகியவை நிகழும். இத்தகைய நிகழ்ச்சிகள் எல்லாம் மாமக்காரர்கள் முதலில் செய்த பிறகே மற்றவர்கள் செய்ய வேண்டும். பிறகு மணமகளின் உடன் பிறந்தவர்களில் ஒருவர் மணமகனுக்கும், மணமகளின் உடன் பிறந்தவர்களின் ஒருவர் மணமகளுக்கு திரட்டுப்பால் தடவுவார்கள். வாழ்க்கை வளமுடன் இனிமை பொருந்தியதாக அமையட்டும் என்பதற்கு அறிகுறியாக திரட்டுப்பாலுக்குப் பதிலாக வாழைப்பழத்தை தின்பதற்குக் கொடுக்கின்ற நிகழ்ச்சிதான் இது. காலப்போக்கில்

வாழைப்பழத்தை மணமக்களின் வாயில் தடவி, வேடிக்கையாகச் சிரித்து மகிழ்கின்ற நிகழ்ச்சியாக மாறியிருக்கிறது.

பிறகு மாப்பிள்ளை தலையில் எண்ணெய் சீயக்காய், தண்ணீர் முதலியவற்றை பெண்ணும், பெண்ணின் தலையில் மாப்பிள்ளையும் மாவிலையால் தொட்டு வைப்பார்கள்.

அதன் பிறகு மாப்பிள்ளையின் எதிரில் ஒரு முக்காலி வைத்து அதன் மீது ஒரு சட்டியை வைத்து அதில் சோறு, பருப்பு, நெய், வாழைப்பழம் முதலியவற்றைப் பரிமாறியப் பின் மாப்பிள்ளை அதைச் சுவைத்துப் பாக்க வேண்டும். பிறகு மாப்பிள்ளை கை அலம்புவதற்குப் பெண் நீர் ஊற்ற வேண்டும்.

பிறகு மாமக்காரர்கள் இருவரும் மணமக்கள் தலைகளில் கொண்டை மாலைகளை மூன்று முறை மாற்றி மாற்றி வைப்பார்கள். பின்னர் பெண்ணின் தந்தை தலைச் சீலையில் பணம் முடிதல் வேண்டும். மணமக்கள் முன் இருக்கின்ற முக்காலி மீது உள்ள சட்டியில் அரிசி, மஞ்சள், தேங்காய் வைத்து ஒரு பட்டுத் துணியால் (மாமப்பட்டு) இரு மாமக்காரர்களும் மூடினாற்போலப் பிடித்திருக்க மணமக்கள் இருவரும் அதை எடுத்து மூன்று முறை மாற்றிக் கொள்ள வேண்டும்.

பட்டுத்துண்டு போர்த்திய நிலையிலேயே மணமக்கள் இருவரும் எழுந்து அரசா(ணி)ணைக்காலையும் அக்னியையும் சுற்றி வலம் வந்து, நடு வீட்டில் சென்று அமரவேண்டும். மாமக்காரர் அந்தப் பட்டுத் துணியை விலக்கிய பிறகு அந்தப் பொருளை அங்கு வைத்துவிட்டு எழுந்து வெளியே வர வேண்டும்.

## தலைச் சீலையில் முடிதல்

மணமகளின் தந்தை தன் மகளை மணமகன் வீட்டிற்கு அழைத்துச் செல்லும்போது வழிச் செலவுக்கு கொடுக்கின்ற முதல் பணப் பரிசுதான் தலைச் சீலையில் முடிதல் என்பதாகும். மணமளின் தந்தை ஒரு சிறு தொகையை மணமகனின் தலையில் வைப்பார். அதனை எடுத்து மாமக்காரர் மணமகன் தந்தையிடம் கொடுத்து வைப்பார். பின்னர் இந்தத் தொகை மணமகளுக்கு

கொடுத்துவைப்பார். பின்னர் இந்தத் தொகை மணமகளுக்குக் கொடுக்கின்ற சீதனப் பணத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

## வேவு எடுத்தல்

தலைப்பிள்ளைக்கு மட்டும் முதலில் மாமவேவு எடுத்தல் வேண்டும். அதற்குப் பெண் வீட்டார் தயாரித்துள்ள பச்சரிசி, இலைக்கட்டு, பரங்கிக்காய், வாழைப்பழம், கற்கண்டு, மஞ்சள், பழங்கள் முதலியவற்றைப் பணியாட்கள் தலைமேல் வைத்துப் பெண்ணுக்கு ஆயாள் வீட்டுப் பங்காளிகள் எல்லோரும் மேள தாளத்துடன் கொண்டு வருவார்கள். பெண் வீட்டு முகப்புப் பத்தியில் கோலத்திற்கு முன்பாக அவர்களை நிற்கச் செய்து பெண்ணின் அப்பத்தாள் குத்து விளக்கு வைத்து பின் தாய் மாமன் வீட்டு ஆண்கள் தலையில் புழுங்கலரிசி படி 2, தேங்காய் 2, கத்தரிக்காய் 2, கொண்ட வேவுக்கடகத்தைத் தலையில் வைத்து கொள்ள முதலில் பெண்ணும், பிறகு அவள் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் ஒவ்வொருவராக வந்து 5, 7, 9 என்ற ஒற்றைப் படை எண்ணிக்கையில் இறக்கி நடு வீட்டில் கொண்டு போய் வைத்து விட வேண்டும்.

மாப்பிள்ளை தலைப்பிள்ளையாக இருந்தால் மாப்பிள்ளையின் ஆயாள் வீட்டாரும் இந்த வேவு எடுத்தல் வேண்டும். ஆயாள் வீட்டு ஆண்கள் தலையிலிருந்து மாப்பிள்ளை வீட்டுப் பெண்கள் இறக்க வேண்டும்.

பிறகு பெண் வீட்டார் கல்யாண வேவு எடுத்தல் வேண்டும். கல்யாண வேவின்போது பெண் வீட்டு ஆண்களான பெண்ணின் தந்தை, பெண்ணின் பெரியப்பா, சித்தப்பா, பெண்ணின் அண்ணன் தம்பிகள், பெண்ணின் அண்ணன் தம்பி மகன்கள், பெண்ணின் அய்யாக்கள், வீட்டுப் பங்காளிகள் கூடிக்கிற பங்காளிகள், பெரும் பங்காளிகள் ஆகியோர் தலையில் வேவுக் கடகத்தை வைத்துக் கொள்ள மாப்பிள்ளை வீட்டு பெண்களான கல்யாணப் பெண், மாப்பிள்ளையின் தாயார், மாப்பிள்ளையின் ஆச்சி, தங்கைமார், மாப்பிள்ளையின் ஆச்சி தங்கச்சி மக்கள், மாப்பிள்ளையின் பெரியப்பச்சி, சித்தப்பார் மகள்கள் இறக்கி இருவருமாக நடுவீட்டுக்குள் கொண்டுபோய் வைத்தல் வேண்டும்.

## பணம் எழுதுதல்

திருப்பூட்டி முடிந்ததும் நேரத்தை அனுசரித்து மாப்பிள்ளை வீட்டுப் பங்காளிகளும், பெண் வீட்டுப் பங்காளிகளும் தனித்தனியாக இருந்து பணம் எழுத வேண்டியது. ஒரு முக்காலியில் சர்வச்சட்டியை வைத்து பச்சை பாலை ஊற்றி, வெற்றிலையை கிள்ளிப் போட்டு அதில் ஒரு ரூபாய் நாணயத்தையும் போட்ட பின் பணம் எழுத வேண்டும்.

முதலில் அந்த வகை ஆட்கள் அப்புறம் பங்காளிகள் பிறகு உறவினர்களாகவும், பங்காளிகளாகவும், உள்ளவர்கள். பிறவு மாமக்காரர்களையும் எழுதி பின்பு சடங்குக்காரர்கள் சம்பந்தப்புரங்களையும், உறவினர், நண்பர்களையும் எழுதி ஒன்றாக பணத்தை சிவப்புத் துணியில் முடிந்து மாப்பிள்ளை வீட்டார் எழுதிய பணத்தை, மொய்ப்பண ஏட்டுடன் வெற்றிலை பாக்கு, மலர் எழுமிச்சம்பழம் உள்ள தாம்பளத்தில் வைத்து மாப்பிள்ளை, பெரியவர்கள், மாமக்காரர்கள் ஆகியோரிடம் கொடுத்து வணங்கி வாங்கி பின்னர் இளையவன் ஒருவன் மாப்பிள்ளையை வணங்க, இருவரும் சேர்ந்து அந்த மொய்ப்பண முடிச்சு உள்ள தாம்பாளத்தை நடுவீட்டிற்குள் வைத்து பிறகு எடுத்துக் கொண்டு வந்து கணக்கில் வரவு வைத்துக் கொள்ள வேண்டும்.

## கும்பிட்டுக் கட்டிக் கொள்ளுதல்

மணவறை முடிந்து நெற்கோட்டைத் தாண்டி வீட்டிற்குள் சென்று வந்ததும் நடுவாசலில் மணமக்கள் வந்து ஆளுக்கொரு நாற்காலியில் அமரவேண்டும். மாப்பிள்ளை, பெண் இரு வீட்டுப் பெற்றோர்களும் பெரியவர்களும், ஒவ்வொருவராக அவர்கள் முன்வந்து நின்றவுடன் மாப்பிள்ளை, பெண் இருவரும் கீழே விழுந்து வணங்கி வாழ்த்துப் பெறுதலே இந்நிகழ்ச்சி.

## சீராட்டுக் கொடுத்தல்

மணமகளுக்கு அவர் தகப்பனாரும் அவருடைய சகோதரர்களும் தருகின்ற பணம்தான் சீராட்டு, மணமகளை மனையில் உட்காரச் செய்து வள்ளுவப்பையில் (பாக்கு, மஞ்சள், எழுத்தாணி முதலியன வள்ளுவப்பையில் இருக்கும்) ஒவ்வொரு பெயராகப் படிக்க,

மணமகளின் தந்தை, ஒவ்வொரு பெயருக்கும் ஒவ்வொரு பிடிபாக்கு போடுவார்கள். இப்படி பிடி பாக்கு வள்ளுவப் பையில் போட்டதும் அதை கட்டி முடிந்து, தாம்பாளத்தில் வைத்துப் பெரியவர்களிடம் கொடுத்து மணமகன் வணங்கிப் பெற்றுக் கொள்வார். கடைசியாக மணமகனைவிட இளையவர் ஒருவர் மணமகனை வணங்க இருவரும் அதை கொண்டு போய் நடுவீட்டில் வைத்து விட்டு வருவார்கள். கடைசியாக கணக்குப் பார்த்து சீராட்டுப் பணம் சீதனத்துடன் சேர்த்துக் கொள்ளப்படும்.

## மஞ்சள் நீராடுதல்

மணமக்கள் இருவரும் நல்ல உடைகளைக் களைந்து விட்டு வேறு சாதாரண உடைகள் அணிந்து கொண்டு நடுவாசலில் ஒரு பெஞ்சின்மீது அமர வேண்டும். உள்ளூர் கோயில் வயிராவி மாப்பிள்ளைக்கு எண்ணெய்த் தொட்டு வைப்பார். பிறகு வயிராவி, கரைத்து வைத்திருக்கும் மஞ்சள் நீரை மாப்பிள்ளை, பெண் பாதங்களில் ஊற்றுவார்.

அப்போது மணமக்கள் தந்தையார் இருவரும் தங்களது வேட்டி நுனிகளை மஞ்சள் நீரில் நனைத்துக் கொள்ளல் வேண்டும். இதுபோல் தயார் இருவரும் மஞ்சள் நீரில் சேலை நுனிகளை நனைத்துக் கொள்ள வேண்டும். பிறகு மணமக்கள் நாணாலைக்குரிய ஆடைகளை அணிந்து கொள்ள வேண்டும். இதன் பிறகு மணமகன் வீட்டுப் பெரியவர்கள் நீராலாத்தி எடுப்பார்கள்.

## நீராலாத்தி

ஒரு சிறிய தாம்பளத்தில் கொஞ்சம் தண்ணீர் விட்டு அதில் மஞ்சள் தூளையும் சுண்ணாம்பையும் கலந்து வெற்றிலை கிள்ளிப் போட்டிருப்பார்கள். இது செந்தூர நிறத்தில் இருக்கும். இதுவே நீராலாத்தி ஆகும்.

## காப்புக் கழற்றி கால் மிஞ்சி அணிதல்

பெண்ணை மணை மேல் நிற்க வைத்து மாப்பிள்ளையின் தாயார் பெண்ணுக்கு தன்கையில் அணிந்துள்ள காப்பைக் கழற்றி

அணிவித்து, பெண்ணின் கால் விரல்களில் இரண்டாவது விரல்களில் மிஞ்சி அணிவிக்க வேண்டும்.

பிறகு திருப்பூட்டிய பிறகு செய்து கொள்ளும் சடங்கைப்போல மாப்பிள்ளையின் தாயார் சடங்கு செய்து கொள்ள வேண்டும்.

## காப்பு அவிழ்த்தல்

மாப்பிள்ளை பெண் இருவருக்கும் அவரவர் கையில் உள்ள அய்யரால் முடியப்பெற்ற காப்பு இரண்டையும் தனித்தனியாக அந்தந்த மாமக்காரர் அவிழ்த்து ஒரு தாம்பாளத்தில் வைத்து விட வேண்டும்.

## பிள்ளை எடுக்கிக் கொடுத்தல்

சடங்குக் குழவியை சிகப்புத் துணியில் வைத்து அதைக் குழந்தையாகவே கருதி பெண்ணின் தந்தை எடுக்கிக் கொடுக்க, பெண் வணங்கி வாங்கிக் கொள்வதுதான் இச்சடங்கு. இதுபோல் பெண் வீட்டு ஆண்களில் முக்கியமானவர்கள் எல்லோரும் பிள்ளை எடுக்கிக் கொடுத்து ஆசீர்வாதம் செய்ய வேண்டும்.

## அரசா(ணி)ணைப் பொங்கல் இடுதல்

பெண்ணின் அம்மான் மனைவி அரசா(ணி)ணைக் காலுக்குமுன் பொங்கலிட்டு இறக்க வேண்டியது. பிறகு அதை வண்ணாத்தியிடம் கொடுக்க வேண்டும்.

## பெண் சொல்லிக் கொள்வது

பெண் தாய்வீட்டிலிருந்து கணவன் வீட்டுக்குச் செல்ல இருப்பதால் தன் தாயிடமும் தாயாதிகளிடமும் சொல்லிக் கொள்ள வேண்டும். பெண் நடுவீட்டுக்குப் பக்கத்தில் உள்ள பத்தியில் விரித்திருக்கும் பாய் ஒன்றில் கிழக்கு முகமாக கையில் வெற்றிலை பாக்குத் தாம்பாளத்துடன் நிற்க வேண்டும். பெண்ணின் பெற்றோர், உறவினர், பங்காளிகள் ஒவ்வொருவராக அந்தப் பாயின் மீது எதிரில் நிற்க, அவர்களிடம் வெற்றிலை பாக்குத் தாம்பாளத்தைக் கொடுத்து, அவர்கள் காலில் விழுந்து வணங்கி, சென்று வருகிறேன் என்று சொல்லி வாங்கிக் கொள்ள வேண்டும்.

## குடி அமைப்பு

பெண் சொல்லிக் கொண்டதும் மணமக்கள் இருவரும் நடுவீட்டில் உட்கார்ந்து இருந்து எழுந்து வந்து முகப்பு நடுப்பத்தியில் கோலத்திற்கு முன் வந்து நிற்பார்கள். பெண்ணுக்கு அப்பத்தாள் வந்து சிலேட் விளக்கு வைத்து, அழகு ஆராத்தி எடுத்து, விபூதி பூசி கட்டுச் சோறுடன் வழியனுப்பி வைப்பார்கள். மாப்பிள்ளைக்கு வலப்பக்கம் இருக்கும்படியாக பெண் அழைத்துச் செல்ல வேண்டியது. இதுசமயம் பெண்ணின் தயார் பால் பானையை கையில் கொண்டு வரவேண்டும்.

மாப்பிள்ளை ஊருக்குச் செல்லும் வழியில் ஒரு ஊருணிக் கரையில் இறங்கிக் கட்டுச்சோறு சாப்பிட்டு விட்டு மாப்பிள்ளை வீட்டுப் பங்காளி ஒருவரது வீட்டில் தங்கியிருக்க வேண்டும். தற்போது மாப்பிள்ளையின் ஊரில் கோயிலிலோ அல்லது பொது இடத்திலோ இருக்க வைக்கிறார்கள்.

## அரசா(ணி)ணைக்கால் அவிழ்த்தல்

பெண்ணின் அம்மான் மனைவி அரசா(ணி)ணைக்காலுக்கு முன் பொங்கலிட்டு இறக்கியதும், பெண்வீட்டு பங்காளிகள் அல்லது பெண்ணின் சகோதரர்களோ சரவிளக்கை மலையேற்றிவிட்டு சரவிளக்கை எடுத்து வைத்துவிட்டு அரசாணிக்காலில் உள்ள அரச இலை, மாவிலை, கிளுவை கம்பு உள்பட யாவற்றையும் அவிழ்த்துவிட வேண்டியது. பின் பங்காளி விட்டு பையன்களில் ஒருவரை அழைத்து முளைப்பாரியை சர்வச்சட்டியில் சிகப்புத் துணிகொண்டு மூடி, ஊருணியில் அல்லது கிணற்றில் சங்கு ஊதிக் கொண்டுபோய் விட்டு வரவேண்டியது. கிளுவை பாலைக் கம்புகளை வீட்டுத் தோட்டத்தில் ஊன்றி வைக்க வேண்டியது.

## திருமணத்தன்று மாப்பிள்ளை வீட்டில் நடைபெறும் நிகழ்ச்சி மாப்பிள்ளை வீட்டில் பெண் அழைப்பு

பெண் வீட்டிலிருந்து திருமணம் முடிந்து விடை பெற்று வந்த மாப்பிள்ளை வீட்டுப்பெண்கள், மாப்பிள்ளை வீட்டு வளவு வாசலில் கோலமிட்டு பெண் அழைத்துப் பொங்கலிட்டு, அடுப்பை

அகற்றிவிடலாம். பெண்ணை அழைத்து வரும் சமயம் மூன்று இலையில் சாதம் படைத்து, ஒரு இலைக்கு 4 வாழைப்பழம், பருப்பு, நெய் ஊற்றிப் படையல் செய்து படைத்த இலைக்கு முன் மூன்று தவலையில் தண்ணீர் வைத்து ஒன்றில் குலம் வாழும் பிள்ளையும், மற்றொன்றில் எழுத்தாணியையும் போடவேண்டும். பெண் மாப்பிள்ளை இருவரும் திருமணம் முடிந்து வந்து தங்கியிருக்கும் இடத்திலிருந்து எல்லோரும் மேளவாத்தியங்களுடனும் மணமக்களை ஊர்வலமாக மாப்பிள்ளை வீட்டுக்கு அழைத்து வரவேண்டும். வீட்டிற்குள் நுழையும் போது முதலில் வலக்காலை எடுத்து வைத்து நுழையும்படி முன்னதாகவே சொல்லி வைத்து அதன்படி மணமக்களை செய்தல் வேண்டும்.

பெண்ணும், மாப்பிள்ளையும் வீட்டிற்கு வந்ததும் முகப்பு நடுப்பத்தியில் கோலத்திற்கு முன்பாக நிறுத்தி மாப்பிள்ளையின் அப்பத்தாள் அழகு ஆரத்தி, பிள்ளையார் ஆரத்தியும் எடுத்து விபூதி பூசி உள்ளே வந்ததும் படைத்த இலைக்கு முன்பாக கிழக்கு முகமாக நிற்கும்படி இருதடுக்குப் போட்டு ஒன்றில் சடங்கு செய்து கொள்பவர்களும், மற்றொன்றில் பெண்ணும் இருக்க வேண்டும். இவர்களுக்கு அருகில் மாப்பிள்ளை நிற்க வேண்டும்.

குறிப்பாக பெண் ஆனவள் பெண் அழைத்துக் கொண்டு உள்ளே வரும்போது எந்த திசையை நோக்கி உள்ளே வருகிறாளோ அத்திசையை பார்த்தவாறே முதல் சடங்கு செய்து கொள்ள வேண்டும். அப்போது திருப்பூட்டுச் சடங்கில் செய்தது போல் யாவற்றையும் செய்ய வேண்டும். அது முடிந்ததும் மற்ற மூன்று திசைகளிலும் அடுத்து, உள்ள சடங்குகள், சிலேட்டு விளக்கை இடக் கையிலும், கெண்டிச் செம்புவலக் கையிலும் வைத்துச் செய்து கொண்டால் போதும். எல்லாச் சடங்கிலும் பெண் கையில் இரண்டு வெற்றிலை இருக்க வேண்டும். நான்கு திசைகளிலும் சடங்கு செய்து வந்தால் ஒரு சுற்று முடிந்துவிடும். பின்னர் இரண்டாவது சுற்று சும்மா வர வேண்டும். மூன்றாவது சுற்று வரும் போது ஒன்றன் பின் ஒன்றாக மணமக்கள் இருவரும் இணைந்து மூன்று தவலைகளுக்குள்ளும் கையை விட்டுப் பார்த்து, குலம் வாழும் பிள்ளையை மாப்பிள்ளை எடுத்துப் பெண்ணின் கையில்

கொடுத்து விட்டு, எழுத்தாணியை தன் கையில் வைத்துக் கொள்ள வேண்டும். அந்தக் குலம் வாழும் பிள்ளையை பெண்பத்திரமாக இடுப்பில் செருகிக் கொண்டு நடுவீட்டில் உட்கார்ந்து வெளியே வரவேண்டும்.

## மாப்பிள்ளை, பெண் பால் பழம் சாப்பிடுவது

பெண் அழைத்து முடிந்தவுடன் வளவில் உள்ள மற்றவர்கள் பால் பழம் தருவார்கள். அத்துடன் பாக்கு பணம் ரூ. 1 அல்லது 2 வைப்பார்கள். அதை முதலில் மாப்பிள்ளை சாப்பிட்டுவிட்டுப் பணத்தை எடுத்து கொள்ள வேண்டும். பின்னர் பெண் எடுத்துக் கொள்ள வேண்டும்.

## பெண் வீட்டார் எடுக்கும் பச்சரிசி வேவு

மாப்பிள்ளை பெண், பால், பழம் சாப்பிட்டதும் மாப்பிள்ளை வீட்டில் பெண் வீட்டார் எடுக்க வேண்டிய வேவு இது. கடகத்தில் பச்சரிசி பெ.படி – 2, தேங்காய் – 2, கத்தரிக்காய் –2, போட்டு இருக்க வேண்டும். பெண் வீட்டைச் சேர்ந்த ஆண்கள் தலையில் இந்த வேவை வைத்து, மாப்பிள்ளை வீட்டைச் சேர்ந்த பெண்கள் இறக்குதல் வேண்டும். குறிப்பாகப் பெண்ணின் தகப்பனார் தலையில் இருந்து பெண் வேவு இறக்க வேண்டும்.

## மாப்பிள்ளை வீட்டார் எடுக்கும் நெல் வேவு

வேவு கடத்தில் நெல் பெரிய படி – 1, தேங்காய் – 2, கத்தரிக்காய் – 2, வைத்து மாப்பிள்ளையின் தகப்பனார் தலைப்பாகை கட்டி நெல் கடகத்தைத் தலையில் வைத்திருக்க வேண்டும். இந்த வேவை பெண் வந்து இறக்குதல் வேண்டும்.

## சீதன உண்டியல்

சீதனம், தலைச்சீலையில் முடிந்தது, பாக்குச் சுருளில் வைத்தது, ஈடு பொன் தந்தது ஆகிய நான்கு தொகைகளையும் குறிப்பிட்டு உண்டியல் எழுதி உடனே செல் வைத்து அந்த உண்டியலையும் அல்லது அதற்கான ரொக்கம் அல்லது டிராப்டையும் ஒரு தாம்பளத்தில் வெற்றிலைப்பாக்கு எலுமிச்சம்பழம், புஷ்பம் வைத்து மணமக்களின்

தந்தையார், பெரியவர்கள், மாமக்காரர் முதலியவர்களிடம் மாப்பிள்ளை கொடுத்து வணங்கிப் பெற்றுக் கொண்டு முடிவில் ஒரு சிறு பையனும் மாப்பிள்ளையும் சேர்ந்து அத்தாம்பாளத்தை நடு வீட்டிற்குள் கொண்டு போய் வைத்து எடுத்து வரவேண்டும்.

பின்னர் பெண்வீட்டாரிடம் பாக்கு வெற்றிலை வாங்கிச் சொல்லிக் கொண்டு புறப்பட வேண்டியது.

## சீர்முறைக் கணக்கு பார்த்துக் கொள்ளுதல்

நாளது தேதியல் திருமணத்தின் போது

ஸ்ரீ தனமாகக் கொடுத்தது ரூ.

தலைச்சீலையில் முடிந்தது ரூ.

ஈடு பொன் வாங்கியது ரூ.

(குறிப்பு : ஈடு பொன் தொகை மாப்பிள்ளை வீட்டார் கொடுத்து, ஸ்ரீ தனத்துடன் அதை சேர்த்துக் கொள்ள வேண்டும் இக்காலத்தில் உண்டியல் எழுதி செல் வைக்காமல் மேலே கண்டுள்ளபடி எழுதிக் கொள்கின்றனர்.)

## நீர்ச்சோறு இடுவது

திருமணம் முடிந்து அன்று இரவோ அல்லது மறுநாளிலோ, பெண்வீட்டார், மாப்பிள்ளை பெண்ணை கூட்டிக் கொண்டு சென்று மாப்பிள்ளைக்கு கஞ்சி, பணியாரம், வள்ளிக்கிழங்கு பொறித்து உள் வீட்டில் இலை போட்டுப் பெண்பரிமாறி தயிர் ஊற்ற வேண்டியது. அப்போதே நடுவீட்டினுள் பெண்ணை உட்காரவைத்து பெண்ணின் அத்தை, பெண்ணின் கழுத்தில் தும்பைக் கட்டிவிட வேண்டியது. அத்தை அல்லது அத்தை மகள் அல்லது அப்பச்சி பெரியப்பச்சி வகையறாவும் தும்பைக் கட்டலாம்.

## மூன்று வேவு அல்லது வழிதல்

திருமணம் முடிந்தவுடன் மூன்று முறை பெண் வீட்டார், மாப்பிள்ளை பெண்ணை தன் வீட்டிற்குக் கூட்டி வரவேணும். இதில்

நீர்ச்சோறு முதல் வழியாகவும் மற்ற இரண்டு வழிகளுக்கும் ஒரே தடவையில் வந்து வரலாம். இந்த முறையுடன் திருமண முறைகள் யாவும் பூர்த்தியடைகிறது. நகரத்தார் திருமணம் சீரும் சிறப்புடன் நிறைவேற்றுகிறது.

## காய்ச்சி ஊற்றிக் கொள்ளுதல்

ஒரு குடும்பத்தில் சிறப்பான நிகழ்ச்சி ஒன்று நிறைவு பெற்றதை முன்னிட்டு இரு குடும்பத்தாரையும் பாராட்டி, அவர்களுடைய உறவினர்கள் (தாய்வழி மாமன்) கொடுக்கின்ற விருந்து இது. புது மணமக்கள் தாய் மாமன் வீடுகளுக்கு சென்று காய்ச்சி ஊற்றி கொள்ளுதல் என்பது தொன்று தொட்டு நிலவி வருகிறது.

மாமாக்காரர் தாலி மாலை முதலியவற்றைப் பெரியவர்களிடம் ஆசிபெறும்போது புரோகிதர் கீழ்க்கண்ட மந்திரத்தைச் சொல்வார்

### வடமொழியில்

மாங்கல்யம் தந்து நானேனனே
மம ஜுவன ஹேதுனா
கண்டே பத்நாமி சுப
சஞ்சீவி சரதம் ஸதம்

### தமிழில்


**இது புனிதமான கயிறு.**


**நான் நல்லவிதமாக வாழ்ந்திருக்க வலிமை பெற்றது.**

**இதை நான் உன் கழுத்தில் அணிவிக்கிறேன்.**


**நீ சகல செல்வாக்கும் படைத்தவளாய் நூறு ஆண்டுகள் சுகபோகங்களுடன் வாழ்ந்திருப்பாயாக.**

# நடுவீட்டுக் கோலம்







தும்பு பிடிக்கும் கோலம்



## பூரம் கழிக்கும் கோலம்




# பொங்கல் கோலம்




# பொங்கல் கோலம்




## பொங்கல் கோலம்




# பொங்கல் கோலம்




## மாப்பிள்ளை அழைப்புக் கோலம் - 1




# மாப்பிள்ளை அழைப்புக் கோலம் - 2




## மாப்பிள்ளை அழைப்புக் கோலம் - 3
## (நடைக் கோலம்)



## மாப்பிள்ளை அழைப்புக் கோலம் - 4



## மாப்பிள்ளை அழைப்புக் கோலம் - 5




## மாப்பிள்ளை அழைப்புக் கோலம் - 6



## குபேர யந்த்ரம், ஐஸ்வர்யம்




Chettiars' Temple Society Singapore

Chettiars' Temple Society
Singapore



**அருள்மிகு ஸ்ரீ வயிரவன்**

**ந. வயீரவன்பட்டி 630215**

தனந்தரும் வயிரவன் தளிரடி
பணிந்திடின் தளர்வுகள் தீர்ந்து விடும்
மனந் திறந் தவன்பதம் மலரிட்டு
வாழ்த்திடின் மகிழ்வுகள் வந்து விடும்
சினந்தவித் தன்னையின் சின்மயப்
புன்னகை சிந்தையில் ஏற்றவேன
தனக்கிலை யீடு யாருமே என்பான்
தனமழை பெய்திடுவான்.

Design & Printed @ GEM OFFSETS : 99622 85010